## திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
## பெரிய திருமொழி
## ஒன்பதாம் பத்து

### பத்தாம் திருமொழி - எங்கள்
### திருக்கோட்டியூர்

** எங்கள் எம் இறை எம் பிரான் *
இமையோர்க்கு நாயகன் * ஏத்தடியவர்
தங்கள் தம் மனத்துப் *
பிரியாது அருள் புரிவான் **
பொங்கு தண்ணருவி புதம் செய்யப் *
பொன்களே சிதறும் இலங்கொளி *
செங்கமலம் மலரும் *
திருக்கோட்டியூரானே 1

எவ்வ நோய் தவிர்ப்பான் * எமக்கிறை
இன் நகைத் துவர் வாய் * நிலமகள்
செவ்வி தோய வல்லான் *
திருமாமகட்கு இனியான் **
மௌவல் மாலை வண்டாடும் *
மல்லிகை மாலையொடும் அணந்து * மாருதம்
தெய்வ நாற வரும் *
திருக்கோட்டியூரானே 2

வெள்ளியான் கரியான் * மணி நிற வண்ணன்
விண்ணவர் தமக்கு இறை * எமக்கு
ஒள்ளியான் உயர்ந்தான் *
உலகேழும் உண்டு உமிழ்ந்தான் **
துள்ளு நீர் மொண்டு கொண்டு சாமரைக்
கற்றை * சந்தனம் உந்தி வந்தசை *
தெள்ளு நீர்ப் புறவில் *
திருக்கோட்டியூரானே 3

ஏறும் ஏறி இலங்கும் ஒண்மழுப் பற்றும் *
ஈசற்கு இசைந்து * உடம்பில் ஓர்
கூறு தான் கொடுத்தான் * குலமாமகட்கு
இனியான் **
நாறு சண்பக மல்லிகை மலர் புல்கி *
இன்னிள வண்டு * நன்னறும்
தேறல் வாய் மடுக்கும் *
திருக்கோட்டியூரானே 4

வங்க மாகடல் வண்ணன் * மாமணி வண்ணன்
விண்ணவர் கோன் * மது மலர்த்
தொங்கல் நீள்முடியான் * நெடியான் படி
கடந்தான் **
மங்குல் தோய் மணி மாட வெண்கொடி *
மாக மீது உயர்ந்து ஏறி * வான் உயர்
திங்கள் தான் அணவும் *
திருக்கோட்டியூரானே 5

காவலன் இலங்கைக்கிறை கலங்கச் *
சரம் செல உய்த்து * மற்று அவன்
ஏவலம் தவிர்த்தான் * என்னை ஆளுடை
எம்பிரான் **
நாவலம் புவி மன்னர் வந்து வணங்க *
மால் உறைகின்றது இங்கென *
தேவர் வந்து இறைஞ்சும் *
திருக்கோட்டியூரானே 6

கன்று கொண்டு விளங்கனி எறிந்து *
ஆநிரைக்கு அழிவு என்று * மாமழை
நின்று காத்துகந்தான் * நிலமாமகட்கு
இனியான் **
குன்றின் முல்லையின் வாசமும் * குளிர் மல்லிகை
மணமும் அளைந்து * இளந்
தென்றல் வந்துலவும் *
திருக்கோட்டியூரானே 7

பூங்குருந்து ஒசித்து ஆனை காய்ந்து * அரிமாச்
செகுத்து * அடியேனை ஆள் உகந்து
ஈங்கு என்னுள் புகுந்தான் * இமையோர்கள் தம்
பெருமான் **
தூங்கு தண்பலவின் கனி * தொகு வாழையின்
கனியொடு மாங்கனி *
தேங்கு தண்புனல் சூழ் *
திருக்கோட்டியூரானே 8

கோவை இன் தமிழ் பாடுவார் * குடம்
ஆடுவார் தட மாமலர் மிசை *
மேவு நான்முகனில் * விளங்கு
புரிநூலர் **
மேவு நான்மறை வாணர் ஐவகை வேள்வி *
ஆறங்கம் வல்லவர் தொழும் *
தேவ தேவ பிரான் *
திருக்கோட்டியூரானே 9

** ஆலு மாவலவன் கலிகன்றி * மங்கையர்
தலைவன் * அணி பொழில்
சேல்கள் பாய் கழனித் *
திருக்கோட்டியூரானை **
நீல மாமுகில் வண்ணனை நெடுமாலை *
இன் தமிழால் நினைந்த * இந்
நாலும் ஆறும் வல்லார்க்கு * இடம் ஆகும்
வான் உலகே 10

**அடிவரவு:** எங்கள் எவ்வம் வெள்ளியான் ஏறு வங்கம் காவலன் கன்று பூங்குருந்து கோவை ஆலும் ஒருநல்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---